சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :02.04.2025
வா.சா.1 – நித்யா W/o முருகேசன்
O.S No.141/2023 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

என் தாயார் பொன்னழகு வருவாய் அலுவலகத்தில் என் மீது பராமரிக்கவில்லை என்று மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் என்னை மட்டும் விசாரித்தார்கள் என் தம்பி வரவில்லை. 2 பேர் பேரிலும் தான் மனு கொடுத்தார் ஆனால் என் தம்பி வரவில்லை. என்னுடைய வழக்குரையில் நான் என் தாயாரை பராமரித்ததாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான சொத்து வரி என் பெயரில் கட்டப்படவில்லை என்றால் சரிதான். என் தாயார் பொன்னழகு பெயரில் உள்ளது. வழக்கு சொத்திற்கான வரி வகையறாக்களை என் தம்பி பிரதிவாதி பாலமுருகன் தான் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வழக்குரையில் சொத்து விபரத்தில் வழக்கு சொத்து காலி மனை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் உள்ள வீடு மற்றும் கட்டிடத்தை பற்றி என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 9 வருடங்கள் ஆகிறது. நான் வழக்கு சொத்திற்கு அருகே தான் குடியிருந்து வருகிறேனே தவிர வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். நான் 2 ஆண்டுகளாக தான் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை. நானும், என் தாயாரும் ஒன்றாக தான் வசித்து வந்தோம். வழக்கு சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்ற விபரத்தை வழகக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றும், வழக்கு சொத்தில் குடியிருந்ததாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு கட்டும் போது, நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் நான் வெளியூரில் மில் வேலைக்கு சென்றுவிட்டேன் அதனால் ஆட்சேபிக்கவில்லை. வழக்கு சொத்தில் வீடு

கட்டும் போது அதன்பின்னராவது ஆட்சேபணை செய்தேனா என்றால் அதன்பிறகும் செய்யவில்லை. என்னுடைய திருமணம் என் தம்பியின் பணத்தினால் தான் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் 9 ஆண்டுகள் மில்லில் வேலை செய்த தொகையை என் தாயார் சேமித்து வைத்து திருமணம் செய்து கொடுத்தார். என் தாயார் தட்டிக்கிடுகு பின்னும் வேலை செய்து வந்தார் என்றால் நான் வேலைக்கு செல்லும் வரை செய்துவந்தார். நான் வேலைக்கு சென்றபிறகு அவர் செய்வதில்லை. பிரதிவாதி பில்டிங் சப்கான்ட்ராக்ட் வேலை செய்து வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. நான் திருமணம் செய்வதற்கு முன்பாகவே வழக்கு சொத்தில் வீடு கட்டப்பட்டுவிட்டது. அப்போது தான் நான் மில்லில் வேலை செய்து வந்தேன். எனக்கு திருமணம் 2014ம் ஆண்டு நடந்தது. என் திருமணத்திற்கு ஆன செலவு மற்றும் சீர்வரிசை அனைத்தையும் பிரதிவாதிதான் செய்து வந்தார் என்றும் அதனால் வழககு சொத்தில் பிரதிவாதிக்கு தான் உரிமை உள்ளது என்றும்,. அப்போது நான் வழக்கு சொத்தில் உள்ள உரிமையை விட்டு கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என் திருமணத்திற்கு 11 சவரன் தங்கநகைகளும் 5லட்சம் பெருமானமுள்ள சீர்வரிசைபொருட்களும், கொடுத்து எனக்கு திருமணம் முடித்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு திருமண செலவு மற்றும் சீர்வரிசை செய்தது தொடர்பாக மயில்சாமி, டீக்கடை சேகர் ஆகியோருக்கு தெரியும் என்றால் அவர்கள் யாரென்றே எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து உரிமையை நான் துறந்துவிட்டதால் பிரதிவாதிக்கு தான் வழககு சொத்தில் முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள வீட்டை மறைத்து காலியிடம் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இந்த வழக்கு நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளோம். வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததற்கான

ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. வழக்கு சொத்தில் உள்ள உரிமையை நான் துறந்துவிட்டு வெளியேறிவிட்டதால் வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பின்னால் காலியிடம் உள்ளது. மேற்படி காலியிடத்தை இந்த வழககில் சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு பகுதியாக சொத்திற்காக பாகம் பிரிக்க செய்யப்பட்டிருப்பதால் இந்த வழககு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சொத்தை பொறுத்து கூட்டு அனுபவம் நிருபிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. வழக்கு சொத்தை பொறுத்து குறைந்த மதிப்பீடு செய்து குறைவான நீதிமன்றம் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பதால் இந்த வழக்கு நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 3ம் தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு மூலம் தவறாக சித்தரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் விசாரைணயில் உள்ள அனைத்து விபரங்களும் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.04.02 19:06:39 +0530

Sub Judge
Melur